# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

.............

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, HARUR

Calendar
Misscellancous
Preliminary Register
Sessions

Case No. **CC 227/18**

Deposition of **PW2** Witness for

Prosecution
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | **திரு. மாதேஸ்வரன்** |
| Father's Name/Husband Name | : | த/பெ குழந்தை |
| Village | : | சூளக்கரை |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27th** Day of **February 2020.**

**திரு.மாதேஸ்வரன்**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது திருவண்ணாமலை வனகோட்டம் தண்டாரம்பட்டு சமூக காடுகள் சரகம் வன சரக அலுவலகராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 20.2.2017ம் தேதி மொரப்பூர் வனச்சரகம் வாதாப்பட்டி பிரிவு வனவராக பணிபுரிந்த சமயத்தில் அன்று அதிகாலை 4.30 மணிக்கு சரக அலுவலகத்தில் இருந்து வனசரக அலுவலர் தலைமையில் அரூர் காப்புகாடு வனவராகிய நானும் அரூர் பீட் வன அலுவலர் பி. செல்வராஜ்

வன காப்பாளர், கே. வெல்சராஜ் வன காவல், கே. ராஜா வனகாவலர் ஆகியோர் குழுவாக அரூர் காப்பு காடு பெரியபள்ளம் சரகபகுதியில் ரோந்துபணிக்கு சென்றபோது வேட்டை நாய் ஒன்று குரைக்கும் சத்தம்கேட்டது. சத்தம் கேட்ட இடத்தை குழுவினர் அனைவரும் சுற்றிவளைத்து சென்று பார்த்தபோது புதரின் மறைவில் ஒருவர் நடமாட்டம் கண்டு அருகில் சென்று சுற்றிவளைத்தோம். அப்பொழுது அந்த நபர் புதர் மறைவில் கம்பி ஒயர்களை கட்டிக்கொண்டிருந்தார். அவரை பிடித்து விசாரித்ததில் அவர் பெயர் அர்ஜுனர் என்றும் த/பெ. பெரியகந்தன், சோலைக்ககொட்டாய் கிராமம் என விசாரணையில் தெரிந்துகொண்டோம். சம்ப இடத்தில் தான் மான்களை வேட்டையாட இருசக்கர வாகனத்தின் எக்லேட்டர் கம்பிகளை சுருக்கு கட்டிக்கொண்டிருந்ததை ஒப்புக்கொண்டார். அவரை பிடித்து வனசரக அலுவலர் விசாரித்தார். விசாரணையில் வன சரக அலுவலர் அவர்கள் முன்னிலையில் எதிரி அர்ஜுணனிடம் வனவர் ஆகிய நான் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். நான் பெற்ற ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து ம.சா.ஆ.6 ஆகும். பிறகு எதிரியை கொண்டு அவர் கட்டியிருந்த எக்லேட்டர் ஒயர் சுருக்குகம்பிகளை கழற்றவைத்து மொத்தம் 22 ஒயர் கம்பிகளை அரூர் பீட் வனகாப்பாளர் எச். நமூனா எண்.12 நாள் 20.02.2017 பறிமுதல் செய்து மகசரில் கைப்பற்றினோம். மேற்படி கம்பிகள் ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிடிபொருட்கள் மற்றும் எதிரியை வனசரக அலுவலகம் கொண்டுவந்து வனசரக அலுவலக வனவிலங்கு கு.எண். 3/2017, நாள் 20.02.2017ல் பதிவு செய்து மாவட்ட வன அலுவலர் அவர்கள் முன்பு ஆஜர்படுத்தி பிறகு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தோம்.